திரு. அ. செல்லப்பா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வீடுகள் கட்டிக் கொள்ளுவதற்காக தமிழக அரசு 500 ரூபாய் கடன் கொடுத்த தாகச் சொல்லப்பட்டது. அவ்வாறு கொடுக்கப்பட்டதா? எத்தனை பேர்களுக்கு அவ்வாறு கொடுக்கப்பட்டது என்பதை அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவர் அவர்களே, இதுவரையில் வீடுகளுக்குக் கடன் பட்டுவாடா ஒன்றும் செய்யப் படவில்லை.

* வினா எண் 141—திரு. சு. பாலன்: மாண்புமிகு தொழி லாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) கடந்த இரண்டு ஆண்டுகளில் ஏற்பட்ட வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு குடிசை மாற்றுவாரியம் மூலம் கட்டப்பட்ட வீடுகளில் குடியேறி உள்ள மக்களிடத்தில் தற்காலிகமாக குடிக்கூலி வசூல் செய்யப்படுவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில் அவர்களை நிரந்தரமாக்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: (அ) ஆம்.

(ஆ) அதற்கு அரசு ஒப்புதல் தேவை இல்லை.

திரு. மு. அரங்கநாதன்: பேரவைத் தலைவர் அவர்களே, குடிசை மாற்று வாரியத்தில் கட்டப்படும் கட்டிடங்கள் முழுமை யாக முடியாமல், அதாவது குடிநீர், வடிகால், இன்னும் மற்ற வேலைகள் முடிவுபெறுமல், வீடுகள் பூட்டப் பட்டிருக்கும்போது, பூட்டை உடைத்துக் கொண்டு குடியேறி இருக்கின்ருர்கள். அவர்களை அகற்றுவத்ற்கு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா? நடவடிக்கை எடுப்பார்களா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவர் அவர்களே, அப்படி நடவடிக்கை எடுக்க இந்த அரசு முன்வரும்போது, சட்ட மன்ற உறுப்பினர்கள் முழுமையாக ஒத்துழைப்புத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் ஆலோசனையை ஏற்றுக் கொண்டு, அவர்களை வெளி யேற்ற துரித நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

திரு. எஸ். ஜே. இராமசாமி: தலைவர் அவர்களே, இந்தக் கேள்வியிலே இப்படிப்பட்ட வீடுகளில் குடியேறி உள்ள மக்களிடத்தில் தற்காலிகமாக குடிக் கூலி வசூல் செய்யப்படுவது அரசுக்குத் தெரியுமா என்று கேள்வி கேட்டிருக்கிருர்கள்.

1978 செப்டம்பர் 11]

ஒருவர் பெயரில் இந்தக் குடிசை மாற்று வாரியத்தில் வீட்டை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், இன்னொருவர் அந்த வீட்டில் குடியிருக்கிறார். இப்படிப்பட்ட தவறைப் போக்குவதற்கு இந்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன் ?

[முற்பகல் 9-40]

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : இதுமாதிரி தவறுகள் நடந்திருப்பது பற்றித் தகவல் கொடுத்தால் அவர்களை வெளியேற்றுவதோடு கடுமையான நடவடிக்கை எடுப்பது பற்றி அரசு பரிசீலனை செய்யும்.

திரு. மு. அரங்கநாதன் : சட்டமன்ற உறுப்பினர்கள் ஒத்துழைப்பு கொடுத்தால் நடவடிக்கை எடுக்கப்படும் என்று சொன்னார்கள். சட்டமன்ற உறுப்பினர்கள் ஒத்துழைப்பு கொடுப்பதோடு மட்டுமல்லாமல் 48 வீடுகளில் ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் புகுந்து குடியேறியிருக்கிறார்கள் என்பது பற்றிக் குடிசை மாற்று வாரியத் தலைவருக்குப் புகார் கொடுக்கப்பட்டும் அந்தப் புகார் மீது நடவடிக்கை எடுக்கப்படவில்லை. இதே மன்றத்தில் திரு. ப. உ. ச. மீது குற்றச்சாட்டுச் சொல்லும்போது அந்தக் குற்றச்சாட்டின்மீது பதில் அளிக்கும்போது அதைப் பற்றித் தெரிவித்திருப்பதோடு அதற்கான ஆதாரத்தையும் நிதியமைச்சர் அவர்களிடம் கொடுத்திருக்கிறேன். இதுவரை அதன் மீது ஏன் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

(பதில் இல்லை)

திரு. மு. அரங்கநாதன் : நான் கேட்ட கேள்விக்கு அமைச்சர் பதில் சொல்லவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பதில் சொல்ல வேண்டுமென்று வற்புறுத்த முடியாது.

திரு. மு. அரங்கநாதன் : * * *

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவு செய்து உட்காருங்கள். வேறு கேள்விக்குப் போயாகிவிட்டது. தயவு செய்து விதிகளைப் படித்துவிட்டு வந்து கேள்விகளைக் கேளுங்கள்.

இதுபற்றி திரு. அரங்கநாதன் பேசிய பேச்சுக்கள் அனைத்தும் நீக்கப்பட வேண்டுமென்று உத்தரவிடுகிறேன்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

திரு. மு. அரங்கநாதன் : * * *

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. அரங்கநாதன் சட்டமன்ற உறுப்பினராக நடந்து கொள்ளவேண்டும். விதிகளைப் படித்துவிட்டு வரவேண்டும். நான் நிற்கும்போது முதலில் உட்கார வேண்டும்.

குடிசை மாற்று வாரியக் குடியிருப்புகளுக்கு மின் இணைப்பு.

* வினா எண் 142—திரு. டி. கே. கபாலி : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) குடிசை மாற்று வாரியம் கட்டிய வீடுகளில் குடியிருப்பவர்கள் தங்களது வீட்டிற்கு மின்சாரம் அமைத்துக் கொள்வதற்கு அனுமதி அளிக்கப்படுகிறதா?

(ஆ) இல்லை எனில், அதற்கான காரணம் யாது ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :

(அ) குடிசைப்பகுதி மாற்று வாரியக்குடியிருப்புகளில் வசித்து வரும் ஒதுக்கீடுதாரர்கள், வாடகை பாக்கி ஏதும் இல்லாமல் இருந்தால், அவர்களது சொந்த செலவில் குடியிருப்புக்கு மின் வசதி செய்து கொள்ள அனுமதி வழங்கப்படுகிறது.

(ஆ) வினாவுக்கு இடமில்லை.

திரு. என். கிட்டப்பா : குடிசை மாற்று வாரியத்தின் சார்பாக சென்னை மாநகரில் கட்டப்பட்ட வீடுகள் போதிய பராமரிப்பு இல்லாமல் பல இடங்களில் இருந்து கொண்டிருக்கின்றன. குறிப்பாக சென்னை பட்டினப்பாக்கத்தில் குடிசை மாற்று வாரியத்தின் சார்பாகக் கட்டப்பட்டுள்ள வீடுகளைப் பராமரிக்க அலுவலர்கள் இருந்தும் கூட பராமரிக்கப்படவில்லை என்பதைத் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்கள் அறிவார்களா ? அமைச்சர் அவர்கள் தயவு செய்து அந்தப் பகுதிக்குச் சென்று பார்வையிட்டு இனியேனும் பழுது பார்க்க வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய முன்வருவார்களா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக் கொள்வது போல் எல்லா நடவடிக்கைகளும் எடுக்கப்படும். இன்று நான் போவதற்கு முன்னால் குடிசை மாற்று வாரியத் தலைவரை அனுப்பி வைக்கிறேன். தேவைப்பட்டால் நானும் போய் ஆவன செய்கிறேன்.

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.